## பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் சென்னை - 6 அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர்: மருத்துவர். டி. எஸ். செல்வவிநாயகம், எம்டி., டிபிஎச்., டிஎன்பி.,

ந.க.எண்.88564/ப.தொ.4/2015/இரு3

நாள் : 19.10.2021

பொருள்: பணியாளர் தொகுதி - பொது சுகாதாரம்- தமிழ்நாடு அமைச்சுப்பணி - திரு.ப.ரஞ்சித், த/பெ (அமரர்) திரு.கொ.பழனிச்சாமி - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி நியமனம்- பணிவரன்முறை செய்தல் -ஆணை பிறப்பித்தல்-தொடர்பாக.

பார்வை:

1. இவ்வலுவலக செயல்முறை ந.க.எண்.88564./ப.தொ.4/இரு3/2015, நாள்:25.08.2018
2. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், கோயமுத்தூர் அவர்களின் கடித ந.க.எண்.5327/அ5/2018 நாள்:22.08.2019 மற்றும் 16.03.2020
3. இவ்வலுவலக கடித ந.க.எண்.88564./ப.தொ.4/இரு3/2015, நாள்:29.01.2020
4. அரசு கடித எண்.24579/ஏபி1/2020-1,மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை,நாள்:06.11.2020.
5. அரசாணை (நிலை) எண்.48,தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை,நாள்:26.02.2021

1415/2021

*******

**ஆணை:**

இத்துறையில் கோயமுத்தூர் சுகாதாரப் பகுதி மாவட்டம், பூலுவப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் துப்புரவாளராக பணிபுரிந்த திரு.கொ.பழனிச்சாமி என்பவர் 02.04.2005 தேதியில் காலமாகியுள்ளார். அவருடைய மகன் திரு.ப.ரஞ்சித் என்பவர் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு கோயமுத்தூர் சுகாதாரப் பகுதி மாவட்டம், (வட்டார ஆரம்ப சுகாதார நிலையம், பூலுவப்பட்டி) நரசிபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியில் இணைந்துள்ளார். இத்தனியரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை அவர் பணியில் இணைந்த நாளான 29.08.2018 அன்று முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு பார்வை இரண்டில் காணும் கடிதத்தில் துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், கோயமுத்தூர் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. இந்நேர்வில் அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை, நாள்:26.02.2021, பத்தி எண்.(5.1) இல் " 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்குவிலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறை செய்யலாம் என அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

3. எனவே, இந்நேர்வில் கருணையடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ப.ரஞ்சித், த/பெ (அமரர்) திரு.கொ.பழனிச்சாமி என்பவர் இளநிலை உதவியாளராக தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இத்துறையில் 29.08.2018 அன்று முற்பகல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து

.........2

வருகிறார். எனவே, இத்தனியரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை , அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ1) துறை, நாள்:26.02.2021 இல் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகள் / விதிமுறைகளுக்குட்பட்டும் மற்றும் இந்நேர்வில் எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத காரணத்தினால் திரு.ப.ரஞ்சித், த/பெ (அமரர்) திரு.கொ.பழனிச்சாமி என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை தமிழ்நாடு அமைச்சுப்பணியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறையில் அவர் பணியில் சேர்ந்த நாளான 29.08.2018 அன்று முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

தி.சி.செல்வவிநாயகம்,
இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும்
நோய்தடுப்பு மருந்துத்துறை,
சென்னை 6.

பெறுநர்:
திரு.ப.ரஞ்சித், இளநிலை உதவியாளர்,
அரசு ஆரம்ப சுகாதார நிலையம், நரசிபுரம், கோயமுத்தூர் சுகாதாரப் பகுதி மாவட்டம்.
(துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் கோயமுத்தூர் மூலமாக)
நகல்
துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் – கோயமுத்தூர்:- பதிவஞ்சல் ஒப்புகையுடன்- ( தனியரின் பணிவரன்முறை தொடர்பான உத்தரவினை பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளுமாறு துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் கோயமுத்தூர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும் தனியரின் கீழ்கண்ட சான்று மற்றும் மறைந்த அரசு ஊழியர் திரு.கொ.பழனிச்சாமி என்பவரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகின்றது. அதனை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை அளிக்குமாறு துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் கோயமுத்தூர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)

பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்று(அசல்)( 0211494)

நகல்
வட்டார மருத்துவ அலுவலர், வட்டார ஆரம்ப சுகாதார நிலையம், பூலுவப்பட்டி,
கோயமுத்தூர் சுகாதாரப் பகுதி மாவட்டம்.
இவ்வலுவலக ப.தொ.4 பிரிவின் இருக்கை 4.
இருப்புக்கோப்பு/ உபரி-2

//உண்மை நகல் உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்

21/10/2021